செய்தி வெளியீடு எண்:098 நாள் :15.02.2014

## செய்தி வெளியீடு

தமிழக அரசு இந்திய குடிமைப் பணிகளுக்கு நம் மாநிலத்திலிருந்து அதிக எண்ணிக்கையில் நியமிக்கப்பட வேண்டும் என்கிற உயர்ந்த நோக்கத்தோடு இப்பணிகளுக்கான தேர்வுகளில் கலந்து கொள்ள விரும்பும் சமுதாய மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு சீரிய பயிற்சி அளிக்க அகில இந்திய குடிமைப் பணிகளுக்கான பயிற்சி மையத்தினை பசுமை வழிச்சாலையில் உள்ள காஞ்சி வளாகத்தில் நடத்தி வருகிறது. இப்பயிற்சி மையத்திற்கான புதிய கட்டடம் அனைத்து வசதிகளுடன் சுமார் 10 கோடி ரூபாய் செலவில் மாண்புமிகு தமிழக அமைச்சர் அவர்களால் 12.10.2012 அன்று திறந்து வைக்கப்பட்டது. இம்மையத்தில் பயிற்சி பெறும் தமிழக மாணவர்கள் பெருமளவில் அகில இந்திய பணிகளுக்கு தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். கடந்த மூன்றாண்டுகளில் மட்டும் இம்மையத்தில் பயிற்சி பெற்ற 144 மாணவ / மாணவியர்கள் பல்வேறு அகில இந்திய பணிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது இந்திய வனப்பணிக்கான தேர்வு பாடத்திட்டத்தில் மத்திய தேர்வாணையம் சில மாறுதல்களை செய்துள்ளது. 2013ஆம் ஆண்டு முதல் இந்த புதிய திட்டத்தின்படி வனப் பணிக்கு அலுவலர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அகில இந்திய பணியான இந்திய வனப் பணிக்கு முதன்மைத் தேர்வு பொதுவாக நடத்தப்படுகிறது. அதற்குப் பின்னர் முதன்மைப் பயிற்சியில் தேர்ச்சி பெற்றவர்களுக்கான பிரதானத் தேர்வு பிரத்தியேகமாக நடத்தப்படுகிறது. இந்த புதிய முறை குறித்த விழிப்புணர்வை தமிழகத்தில் உள்ள மாணவர்களுக்கு ஏற்படுத்தினால் அவர்கள் அதிக எண்ணிக்கையில் எழுதுவதற்கு உந்துதலாக இருக்கும் என்பதை கருத்தில் கொண்டு இப்பயிற்சி மையத்தின் மூலமாக அண்ணா மேலாண்மை நிலையம் இதற்கான ஒரு நாள் விழிப்புணர்வு முகாமை இலவசமாக நடத்த திட்டமிட்டது.

இந்த விழிப்புணர்வு முகாம் 15.02.2014 (சனிக்கிழமை) அன்று நடத்தப்படுவது குறித்து 07.02.2014 மற்றும் 10.02.2014 ஆகிய தேதிகளில் தமிழ், ஆங்கில நாளேடுகளில் செய்திக்குறிப்பு

வெளியிடப்பட்டது. இது குறித்த அறிவிப்பு தொலைக்காட்சிகள் வாயிலாகவும் ஒளிபரப்பப்பட்டது. அதன்பேரில், இந்த விழிப்புணர்வு முகாமில் கலந்து கொள்ள விருப்பம் தெரிவித்து 400 மாணவ / மாணவியர்கள் விண்ணப்பித்தனர். அவர்களில் முதலில் பதிவு செய்த 330 நபர்களுக்கு அனுமதி மின்னஞ்சல் அனுப்பப்பட்டது.

இந்திய வனப்பணிக்கான தேர்வு குறித்து இன்று நடைபெற்ற ஒரு நாள் விழிப்புணர்வு முகாமிற்கு முனைவர்.வெ.இறையன்பு, இ.ஆ.ப., இயக்குநர், அண்ணா மேலாண்மை நிலையம் மற்றும் பயிற்சித் துறைத் தலைவர், முனைவர். எஸ். பாலாஜி, இ.வ.ப., கூடுதல் முதன்மை வனக்கட்டுப்பாடு அலுவலர், முனைவர். சுந்தரராஜன்,இ.வ.ப., முன்னாள் தலைமை வனக்காப்பாளர் (ஓய்வு) ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அகில இந்திய குடிமைப் பணிகளுக்கான பயிற்சி மையத்தின் முதல்வர் (பொ), திருமதி. ப்பி.பிரேம் கலா ராணி வரவேற்புரையாற்றினார். முனைவர். எஸ்.பாலாஜி, இ.வ.ப., திரு. வி.பி.கௌதம், இ.வ.ப., திரு.சிவராம் பாபு, இ.வ.ப., திரு. ராஜ்குமார், இ.வ.ப. மற்றும் திரு. கிருஷ்ணமூர்த்தி, இ.வ.ப ஆகியோர் வனப்பணிகள் குறித்த வாய்ப்புகள் தேவையான அறிவுத்திறன் போன்றன குறித்து விரிவாக மாணவர்களுக்கு கருத்துரைகள் வழங்கினார்கள். மருத்துவப் பணிகளுக்கான தேர்வுக் குழு உறுப்பினர் மருத்துவர் ஏ,குமரேசன் அவர்கள் இத்தேர்வுகளுக்கு திறம்பட ஆயத்தம் செய்வது குறித்து அறிவுரைகளை வழங்கினார். நிறைவாக முனைவர். டி.சேகர், இ.வ.ப. அவர்கள் தலைமையில் மாணவர்களுக்கு ''குழு கலந்தாய்வு'' நடைபெற்றது.

இதே போன்று, இந்திய புள்ளியியல் பணி, இந்திய பொருளாதார பணி, இந்திய பொறியாளர்கள் பணி, போன்ற அகில இந்திய பணிகள் குறித்த விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட உள்ளன. இதன் மூலம் தமிழக இளைஞர்கள் அதிக அளவில் அகில இந்திய பணிகளில் தெரிவு பெற வாய்ப்பு ஏற்படுத்தப்படும்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9